Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

வெள்ளிக்கிழமை ஜனவரி 07, 2022 | ஒளி: 07 கதிர் 199 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★

## பூநகரி பட்ஜெட் நிறைவேறியது

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் (பட்ஜெட்) 09 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக 03 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா இடைநிறுத்தம்

■ எஸ். தில்லைநாதன்

வல்வெட்டித்துறையில், வருடாந்தம் தைப்பொங்கல் தினத்தில; நடாத்தப்படும் பட்டத் திருவிழா, இந்த ஆண்டும் இடைநிறுத்தப்பட்டு உள்ளது.

வல்வெட்டித்துறை உதயசூரியன் திடலில் வருடாந்தம் பட்டத் திருவிழா நடைபெறுவது வழமை.

இந்த நிலையில், அந்தப் பகுதி மக்களுக்கும் ஏற்பாட்டுக் குழுவுக்கும் இடையில், நேற்று முன்தினம் (05) நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரமே, பட்டத் திருவிழா இடைநிறுத்தப்பட்டது.

அதிகரித்து வரும் கொரோனா பரவலால் கடந்த ஆண்டும் பட்டத் திருவிழா நடைபெறவில்லை.

இதேபோன்று, இந்த ஆண்டிலும் கொரோனா தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றமை உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து, பட்டத் திருவிழாவை இடைநிறுத்த மக்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதையடுத்தே, பட்டத் திருவிழா இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## அக்கிராசன உரை தொடர்பில் விவாதமொன்றை நடத்தவும்

### ரணில் கோரிக்கை: கடிதமும் அனுப்பினார்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் நாளன்று, ஜனாதிபதி ஆற்றும் அக்கிராசன உரை தொடர்பில், சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எம்.பியுமான ரணில் விக்கிரமசிங்க கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.



தொடர்ச்சி P2

## சிலந்தியில் மனித முகம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை ஹிஸ்புல்லாஹ் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில், மனித முகம் போன்று காட்சியளிக்கும் சிலந்தியை வீட்டு உரிமையாளர்கள் நேற்றிரவு கண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ‘சலுகை பொதி ஒரு சலுகையற்ற பொதி’

### திருகோணமலையில் சஜித் தெரிவிப்பு



அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள சலுகைப் பொதி உண்மையில் ஒரு சலுகைப் பொதியல்ல. சலுகைகள் அற்ற பொதியே வழங்கப்படவுள்ளது எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, பணத்தை அச்சடித்து, பணவீக்கத்தை உயர்த்தி விட்டு, வழங்கப்படும் நிவாரணப் பொதியின் முடிவு என்னவாக இருக்குமென்பது விரைவில் விளங்கும் என்றார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டில் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியே ஆட்சிக்கு வந்தது. இன்று நெருக்கடிக்குள் அவ்வரசாங்கம் உள்ளாகியுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை தலைமை அலுவலகத்தை, நேற்று (06) திறந்து வைத்து உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் குட்டியாராச்சிக்கு கிடைத்தது எவ்வாறு

### சுசில் கேள்வி: வரிசையில் நிற்கும் மக்களின் பின் செல்லுமாறு அறிவுரை

தனக்கு பின்னால், புலனாய்வுப் பிரிவினர் வந்ததாகவும் அவர்களின் தகவல்களுக்கு அமையவே தான் பதவி நீக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளமை பாரதூரமான கருத்தாகுமென தெரிவித்துள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, புலனாய்வுப் பிரிவினர் சமையல் எரிவாயு, பால்மாவுக்கு வரிசையில் நிற்கும் மக்கள் பின்னால் சென்று தகவல்களைத் திரட்ட வேண்டும் என்றார்.



தொடர்ச்சி P2

## இணைவோரை அழித்த வரலாறே மைக்கு உண்டு

### பிரமித கேள்வி: ‘விவாகரத்து’ விளையாட்டு என்கிறார்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த, அனைத்து சிறு கட்சிகளும் அழிந்ததே வரலாறாகும் என தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன், அக்கட்சியுடன் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றார்.



தொடர்ச்சி P2

## கீரை பிடுங்கச் சென்றவர் முதலை தாக்கி மரணம்

கீரை பிடுங்குவதற்காக, கால்வாய்க்குள் இறங்கிய இரண்டு பிள்ளைகளின் தந்தை, முதலையால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அம்பலாந்தோட்டை தெஹிலந்த பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதான, தொழிலாளி ஒருவர், தமது பிள்ளைகளின் பசியைப் போக்குவதற்காக கால்வாய்க்குள் இறங்கி கீரை பிடுங்கிக்கொண்டிருந்தார். இதன்போதே, முதலைக்கு இரையாகியுள்ளார்.

தொடர்ச்சி P2





## பிரதமர் வரவேற்றார்

ஹாமில் நடைபெறவுள்ள 22ஆவது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை முன்னிட்டு, உலகளாவிய ரீதியில் 72 நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகின்ற மாகாராணியின் கோல், இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதனை, அலரிமாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வரவேற்றார்.

## பொங்கலுக்கு முன்னர் அமைச்சரவை மாற்றம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில், மற்றுமோர் அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட விருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த மாற்றங்கள், எதிர்வரும் பொங்கலுக்கு முன்னதாக இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவென அறியமுடிகின்றது.

இராஜாங்க அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில், அமைச்சரவை மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தாலும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் சிலவற்றிலும் மாற்றங்கள் செய்யப்படக்கூடுமென அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

### ஓய்வுபெறும் வயதெல்லை

## 65ஆக அதிகரிப்பு

### சுற்றுநிருபம் வெளியிட்டது

அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் சுற்றுநிருபம் பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நேற்று (06) வெளியிடப்பட்டது.

2022 வரவு-செலவுத் திட்ட யோசனைக்கு அமையவே இந்த சுற்றுநிருபம் வெளியிடப்படவுள்ளது. எவ்வாறாயினும், அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் திட்டத்துக்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக இலங்கை நிர்வாக சேவை சங்கம் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தது.

தொடர்ச்சி P2

### ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாடு:

## நிவர்த்திக்கும் சுற்றுநிருபம் வெளியானது



ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை நிவர்த்திசெய்து பொது நிர்வாக அமைச்சினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் அதிபர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்காக கடந்த ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி மற்றும் ஜனவரி 3 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கிணங்க இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாட்டுடன் இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறையாகும் வகையில் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## காரில் கஜமுத்துகளை கடத்திய இருவர் கைது

■ கனகராசா சரவணன்

பதுளையில் இருந்து அம்பாறைக்கு காரில் 3 கஜமுத்துகளை கடத்திச் சென்ற இருவரை, அம்பாறை நகர் பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் நேற்று (06) அதிகாலை கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக அம்பாறை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.



விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, அம்பாறை - கண்டி வீதியின் புத்தங்கல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே, அம்பாறை நோக்கிப் பயணித்த காரை விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

குறித்த காரில் 3 கஜமுத்துகளை கடத்திவந்த இருவரையும் கைது செய்ததுடன், கஜமுத்து மற்றும் காரையும் அம்பாறை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### கசிவு, வெடிப்பு, உயிரிழப்புகளுக்கு

## பொறுப்பேற்க முடியாது

### லிற்றோ நிறுவனத்தின் தலைவர் தெரிவிப்பு

லிற்றோ சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புகளால் உயிரிழந்தோர், ஏற்படும் கசிவுகள் மற்றும் வெடிப்புச் சம்பவங்களுக்கு தன்னால் பொறுப்பேற்க முடியாதென அந்நிறுவத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார். லிற்றோ நிறுவன சிலிண்டர்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 10 இலட்சம் ரூபாய் காப்புறுதி உள்ளது. அதனை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.



தொடர்ச்சி P2

## காணாமல் போன சிறுவர்கள் இருவரும் ஒப்படைப்பு



இரத்தினபுரி, கொட்டதெனியாவ வத்தேமுல்ல பகுதியிலிருந்து கடந்த நொவம்பர் மாதம் 23 ஆம் திகதியில் இருந்து காணாமற்போன 10 மற்றும் 12 வயதான சிறுவர்களான மாணவர்கள் இருவரும், மீரிகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கைதிகள் கொலை வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் நேற்று (06) தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



LK Newspapers Viber Community

## சிலந்தியில்...

வித்தியாசமான முறையில் வீட்டின் சுவரில் திரிந்த சிலந்தியை வீட்டு உரிமையாளர்கள் பார்த்த போது அதில் மனித முகம் போன்று காட்சியளித்துள்ளது.

இவ்வாறு தமது வீட்டுக்குள் வந்த அபூர்வ சிலந்தி சிறிது நேரத்தின் பின்னர் அவ்விடத்தை விட்டு சென்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## இணைவோரை...

அரசாங்கத்தை அமைக்க, 70களில் இடதுசாரி கட்சிகள் ஒன்றிணைந்தன. அதன் பின்னர் சகல கட்சிகளும் இல்லாமற் போய்விட்டன என்றார். நாட்டில் மிகவும் பழமையான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்தது. அக்கட்சி எங்கே? எத்தனை வருடங்கள் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து பயணித்தன? என்றும் வினவிய அவர், கைக்கு அரவணைக்கும் பழக்கமில்லை. அழிக்கும் பழக்கம்தான் இருக்கிறது ஆகையால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் நாம்தான் கவனமாக இருக்க வேண்டும் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தொடர்பில் கதைத்து எவ்வித பலனும் இல்லை என தெரிவித்த அவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் மீதொட்டுமுல்ல குப்பை மலையைப் போன்றவர்கள் என்றார்.

அரசியல்வாதிகளுக்கு விரக்தி ஏற்படும் போது பதவி விலகப் போவதாகத் தெரிவிப்பார்கள். ஆனால், பதவி விலக மாட்டார்கள். வீடுகளில் சிறு பிரச்சினை ஏற்படும் போது விவாகரத்து செய்வதாக தெரிவிப்பார்கள். ஆனால அவ்வாறு விவாகரத்து செய்பவர்கள் உண்மையில் எத்தனை பேர் உள்ளனர் என கேள்வி எழுப்பினார்.

## 65ஆக...

ஓய்வுபெறும் வயது 62ஆக காணப்பட வேண்டுமென பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தின் ஊடாக குறித்த சங்கம் இதனை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கீரை பிடுங்கச்...

அவர் கால்வாய்க்குள் இறங்கிய இடத்திலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் அவரது சடலம், நேற்று (06) மீட்கப்பட்டது.

## காணாமல்...

பெண் ஒருவரால் இவ்விருவரும் நேற்று (06) ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மீரிகமவில் உள்ள கடையொன்றுக்கு நேற்றுமுன்தினம் (05) இரவு சாப்பாடு கேட்டு, இவ்விருவரும் வந்தள்ளனர். அந்த கடையில் இருந்த பெண், அவ்விருவரையும் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று, இரவு சாப்பாட்டைக் கொடுத்து, தூங்க வைத்துள்ளார்.

அதன்பின்னர், நேற்றுக்காலை பொலிஸில் ஒப்படைத்துள்ளார் என்பது தெரியவந்துள்ளதெனத் தெரிவித்த பொலிஸார், அவ்விருவரும் தங்க வைக்கப்பட்டிருந்த இடம், காணாமற் போன முறைமை உள்ளிட்டவை தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றனர்.

அவ்விருவரையும் தேடி கண்டுப்பிடிப்பதற்காக பொலிஸார், பொதுமக்களின் உதவியை நாடியிருந்தனர். இந்நிலையிலேயே அவ்விருவரும் மீட்கப்பட்டுள்ளனர்.

## வல்வெட்டித்துறை...

அண்மையில், இந்தப் பட்டத் திருவிழாவை இந்த ஆண்டு சர்வதேச பட்டத் திருவிழாவாக இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த விடயம் பல எதிர்ப்புகளையும், கண்டனங்களையும் ஏற்படுத்தியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘சலுகை பொதி ஒரு சலுகையற்ற பொதி’

அம்மையாரின் 70-77 காலப்பகுதியில் நாட்டில் வரிசைகளில் நிற்கும் யுகம் இருந்தது. மூடிய பொருளாதாரத்தால் இந்நிலைமை ஏற்பட்டிருந்தது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், திறந்த பொருளாதாரம் உள்ள தற்போதைய சூழ்நிலையிலும் கூட, அரசாங்கத்தின் பொறுப்பற்ற,தூரநோக்கற்ற மற்றும் சீர்மையற்ற பொருளாதாரக் கொள்கைகளால் இன்று வரிசைகளின் யுகம் உருவாகியுள்ளது என்றார்.

அமைச்சரவையையும் அரசாங்கமும் முட்டாள்தனமான முறைமைகளை கையாண்டு வருகின்றமையால், தேசிய சொத்துக்கள் விற்கப்படுவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தின் பிரதானிகள் மக்கள் நலனுக்காகத் தீர்மானங்களை எடுக்காமல் தமது சொந்த நலன்களுக்காகவே தீர்மானங்களை எடுக்கின்றனர் என்றார்.

## பொறுப்பேற்க...

இது தொடர்பில் தனியார் ஊடகத்துக்கு கருத்து தெரிவித்த அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கக்கூடாது என தனக்கு எவரும் அழுத்தம் கொடுக்கவில்லை. ஆனால், காஸ் சிலிண்டர்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்காதிருந்தால், தங்களுக்கு பிரச்சினையை கண்டறிய இலகுவாக இருக்குமென, எரிவாயு அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, ஜனாதிபதி நியமித்த குழு தன்னிடம் கோரிக்கை முன்வைத்திருந்தது என்றார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு, கசிவு சம்பவங்கள், அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து லிற்றோ நிறுவனத்தின் தலைவர் என்றவகையில் தன்னால் பொறுப்பேற்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

"லிற்றோ நிறுவனத்தின் தலைவராக கடந்த வருடம் ஜூலை 27 ஆம் திகதி நான் பொறுப்பேற்றிருந்தேன். அப்போதிருந்து இப்போதுவரையில் லிற்றோ காஸ் கலவையில் மாற்றங்கள் எதனையும் செய்யவில்லை" எனவும் தெரிவித்தார்.

> ஒவ்வொரு லிற்றோ சிலிண்டர்களுக்கும் 10 இலட்ச ரூபாய் காப்புறுதிகள் காணப்படுவதாகவும், 1311 என்கிற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை எடுத்து அந்த காப்புறுதி

ஒவ்வொரு லிற்றோ சிலிண்டர்களுக்கும் 10 இலட்ச ரூபாய் காப்புறுதிகள் காணப்படுவதாகவும், 1311 என்கிற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை எடுத்து அந்த காப்புறுதி தொடர்பில் அறிந்துகொள்ள முடியும். எனினும் தற்போது வரையில் சிறிய குறைந்த அளவிலானோரை இந்த காப்புறுதியை பெற்றுக்கொள்கிறார்கள். எனவே அனைவரும் இதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

## நிவர்த்திக்கும்...

இதனிடையே, 2020 ஆம் ஆண்டில் பயிலுனர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு பொதுநிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

51,682 பயிலுனர் பட்டதாரிகளுக்கு இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதென அறியமுடிகின்றது.

இவர்களில் ஒரு வருட பயிற்சியை நிறைவுசெய்த பட்டதாரிகளுக்கு ஜனவரி 03ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒரு வருட பயிற்சியை நிறைவுசெய்யாத பட்டதாரிகளுக்கு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

## பொங்கலுக்கு...

இதேவேளை, இந்த அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் 10ஆம் திகதியன்று மேற்கொள்ளப்படக்கூடுமென செய்திகள் வெளியாகியுள்ளன.

## கைதிகள் கொலை...

கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டியாராச்சி மற்றும் மஞ்சுல திலகரட்ன ஆகிய மூவரடங்கிய மேல்நீதிமன்ற விசேட நீதிபதிகள் குழாமினால் வழக்கின் தீர்ப்பு நேற்று (06) அறிவிக்கப்படவிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் எண்மர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04ஆம் திகதியன்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கின் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த சிறைச்சாலைகளின் முன்னாள் உளவுப்பிரிவு அதிகாரியான இந்திக்க சம்பத், வழக்கு தொடரப்பட்ட சந்தர்ப்பத்தில் வெளிநாடு சென்றிருந்தார்.

அவரின்றி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், முறைப்பாட்டாளர் தரப்பினரால் அவருக்கு எதிரான சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை என சாட்சி விசாரணைகளின் நிறைவில் நீதிபதிகள் குழாம் தெரிவித்தது.

அதற்கிணங்க, குறித்த பிரதிவாதியை விடுவித்து விடுதலை செய்த நீதிபதிகள் குழாம், நியோமால் ரங்கஜீவ மற்றும் எமில் ரஞ்சன் லமாஹேவா உள்ளிட்டோருக்கு எதிராக வழக்கு விசாரணையை தொடர்ந்தும் முன்னெடுத்தது.

2012 நவம்பர் 09 ஆம் திகதி சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட கலகத்தின் போது 27 கைதிகள் கொல்லப்பட்டிருந்தாலும் 08 கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பிலேயே வழக்கை தாக்கல் செய்வதற்கு போதுமான சாட்சிகள் சட்டமா அதிபருக்கு கிடைத்திருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பூநகரி பட்ஜெட்...

தவிசாளர் சிவகுமார் ஸ்ரீரஞ்சன் தலைமையில் வரவு- செலவுத் திட்டத்துக்கான அமர்வு நேற்று (06) முற்பகல் ஆரம்பமானது.

20 உறுப்பினர்களைக் கொண்ட குறித்த பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த 10 பேரும் ஐக்கிய தேசியக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த தலா 01 உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர். சுயேட்சைக் குழுவை சேர்ந்த 03 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

தமிழரசுக் கட்சியின் உறுப்பினர், சுதந்திரக் கட்சியை சேர்ந்த 02 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த உறுப்பினர், சுயேட்சைக்குழுவின் உறுப்பினர் என ஐந்து உறுப்பினர்கள் சபைக்கு நேற்று (06) சமூகமளிக்கவில்லை.

குறித்த சபையின் வரவு- செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டமையால் தவிசாளர் பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து புதிய தவிசாளர் கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அக்கிராசன உரை...

இது தொடர்பில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார். அக்கடித்தின் பிரதிகள், சபைமுதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர், எதிர்வரும் 18ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், பாராளுமன்றம் ஜனவரி 11 ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தி, டிசெம்பர் மாதம் 13ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, சபை நடவடிக்கைகளை ஜனவரி 18ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைத்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பில், ஜனவரி 19,20 ஆம் திகதிகளில் முடிந்தால் 21ஆம் திகதியும், சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தை நடத்த முடியுமென அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## புலனாய்வுப் பிரிவின்...

தன்னைப் போன்ற ஒருவரின் பின்னால் புலனாய்வு பிரிவினர் வரவேண்டிய அவசியமில்லையெனத் தெரிவித்த அவர், சந்தைகளில் மக்கள் என்ன பேசிக்கொள்கின்றனர். விவசாயிகள் ஏன் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் என்பது தொடர்பான தகவல்களை சேகரித்து அரசாங்கத்திடம் வழங்கினால்தான் அரசாங்கம் இதற்கான தீர்வைத் தேடும் என்றார்.

மேற்படி விடயம் தொடர்பாக, ஊடகங்களுக்கு நேற்று (06) கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இவ்வாறான விடயங்களை வைத்துக்கொண்டு எமக்குப் பின்னால் புலனாய்வு பிரிவினர் வரவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், சொல்ல வேண்டியதை நாங்கள் பகிரங்கமாகவே கூறுவோம்" என்றார்.

வரலாற்றிலேயே நாம் எப்போதும் சதி செய்த மனிதர்கள் அல்லர் என தெரிவித்த அவர், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வைத்துவிட்டு, பாராளுமன்றத்தில் உரையாற்றி விட்டே வெளியேறினேன் என்றார்.

இங்கு இன்னொரு முக்கிய விடயம் யாதெனில் புலனாய்வு பிரிவினர் தன் பின்னால் வந்தார்கள் என்றால், இந்தப் புலனாய்வு பிரிவினரின் தகவல்கள் திஸ்ஸ குட்டியாராச்சியிடம் எவ்வாறு சென்றது என்பது பாரதூரமான விடயமாகும் என்றார்.

புலனாய்வுப் பிரிவினரும் அரச பிரதானிகளும் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டிய விடயமாகும். புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் புலனாய்வு பிரிவின் பிரதானிக்கும் பின்னர் அரச உயர்மட்டத்துக்கே செல்ல வேண்டும் என்றார்.

ஆனால், புலனாய்வு பிரிவின் தகவல்கள் தொடர்பில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை , அரசியலமைப்பு தொடர்பில், எமது அரசியல் வரலாறு தொடர்பிலும் தெரியாமல் புலனாய்வு தகவல் குறித்து, பாராளுமன்ற உறுப்பினர் கருத்து வெளியிடுவதானது, பாரதூரமானது என்பதால் அரச பிரதானிகள் உடனடியாக திஸ்ஸ குட்டியாராச்சியின் இந்த அறிவிப்பு குறித்து தனியான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ரூ. 2 இலட்சம் கப்பம் கோரி வானில் வந்த

# தாயாரின் சகோதரன் உட்பட இருவர் கைது: ஒருவர் தப்பியோட்டம்

### மட்டு நீதிமன்றத்துக்கு முன்னால் சம்பவம்

கனகராசா சரவணன்

மட்டு. காத்தான்குடியில் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும் ஒருவரை நீதிமன்றில் இருந்து வெளியில் எடுத்து தருவதாககூறி குறித்த நபரின் தயாரிடம் 2 இலட்சம் ரூபாய் கப்பமாக கோரிய தயாரின் சகோதரன் உட்பட இருவரை நேற்று(06) வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு முன்னால் வைத்து வான் ஒன்றுடன் கைது செய்ததுடன் பிரதான சூத்திராதி தப்பி ஓடியுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியைச் சோந்த ஆண்ணொருவர் கடந்த முதலாம் திகதியன்று ஐஸ் போதைப் பொருளுடன் காத்தான்குடி பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில்



வைக்கப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் இருந்து வெளியில் எடுப்பதற்கு 2 இலட்சம் ரூபாயை கல்கமுக பிரதேசத்தைச் சேர்ந்த முகமட் காசிம் முகமட் நிபான் என்பவார் கோரியுள்ளதாக காத்தான்குடி முதலாம் பிரிவு மோதினார் லேன் சாவியா வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மட்டு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ப.ஐ.கே. ஹாட்டியாராச்சியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி முகமட் ஜெஸ்லி தலைமையிலான பொலிசார் சம்பவதினமான இன்று பகல் மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு முன்னால் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது வான் ஒன்றில் வந்திருந்தவர்களை பொலிஸார் சுற்றிவளைத்தபோது அங்கிருந்து கப்பம் கோரிய பிரதான நபர் தப்பி ஓடியுள்ள நிலையில் வானில் வந்திருந்த முறைப்பாடு செய்தரின் சகோதரன் மற்றும் வான்சாரதியை கைது செய்தது, வான் மற்றும் 4 தொலைபேசிகள், ஆவணங்களை மீட்டுள்ளனர்.

கடந்த 3 தினங்களாக குருநாகல் கல்கமுக பிரதேசத்தைச் சேர்ந்த முகமட் காசிம் முகமட் நிபான் என்பவர் விளக்கமறியலில் இருக்கும் நபரின் மனைவியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட உனது கணவருக்கு பல்வேறு வழக்குகள் இருப்பாதக தெரிவித்து அவரை நீதிமன்றில் எந்தவிதமான ஆவணங்களும் இல்லாம் வெளியில் எடுத்துதர முடியும் இதற்கு 2 இலட்சம் ரூபாய் கப்பமாக கோரியுள்ளார்.



இதனையடுத்து இதனை அவர் மாமியாரிடம் தெரிவித்ததையடுத்து அவர் மருமகளிடம் அவன் கதைப்பதை ரெக்கோடிங்டி செய்து தனக்கு அனுப்புமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். இதில் தொலைபேசியில் கப்பம் கோரியவர் கல்கடுக பிரதேசத்தில் சகோதானின் வீட்டிற்கு சென்று வந்தபோது அங்கு கதைத்த முகமட் நிபான் குரல் என அடையாளம் கண்டு கொண்ட நிலையில், கப்பம் கோரியவர் இன்று மட்டக்களப்பு நீதிமன்றிற்கு முன்னால் வருவதாக் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் கப்பம் கோரிய குறித்த நபர் கல்கமுவ பிரதேசத்தில் வான் ஒன்றை வாடகைக்கு சாரதியுடன் எடுத்துக் கொண்டு இன்று அதிகாலை 4 மணிக்கு தன்னுடன் கல்கமுவ பிரதேசத்தில் திருமணம் முடித்துள்ள முறைப்பாடு செய்திருந்த பெண்ணின் 46 வயதுடைய சகோதரனை அழைத்துக்கோண்டு மட்டக்களப்பு நீதிமன்றிக்கு முன்னால் பகல் வந்தடைந்து காத்திருந்தனர் எனவும் பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

LK Newspaper
Viber Community



# தட்டுப்பாடு நீடிக்கும்

ஐக்கிய அமெரிக்க டொலர் தட்டுப்பாடுகளால், பால்மாக்களுக்கான தட்டுப்பாடு இம்மாத இறுதிவரையில் நீடிக்குமென பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் அஷோக பண்டார தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத்தின் ஆரம்பத்தில் பால்மாவை ஏற்றிவரும் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாகவும், உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரிப்பாலேயே உள்நாட்டிலும் அதன் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்.

இதன்படி இறக்குமதி செய்யப்படும் 1 கிலோகிராம் பால்மா 1,345 ரூபாய்க்கும், 400 கிராம் பால்மா பக்கெற்றின் விலை 540 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒழுக்கமாக இருக்க முடியவிட்டால்

# மைத்திரி விலக வேண்டும்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஒழுக்கமாக இருக்க முடியவில்லை என்றால், உடனடியாக அரசாங்கத்திலிருந்து விலக வேண்டுமென இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அமைச்சரையோ அல்லது நாட்காலிகளையோ மாற்றும் செயற்பாடுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செய்யவில்லை. நாம் ஒழுக்கமாகவும், மக்களை பற்றி சிந்திக்கக்கூடிய வகையிலும்

> **"உரையில் அவர் பயன்படுத்தும் தடித்த வார்த்தைகளில் அவரின் வேறு நோக்கம் புரிகிறது. நாம் இருக்கும் வரையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நோக்கம் நிறைவேறாது**

செயற்படுவோமாக இருந்தால், சிறப்பான நாட்டை எம்மால் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் நாட்டில் என்ன நடந்தது என்பது தொடர்பில் மக்களுக்கு நன்கு தெரியும். நாட்டு மக்கள் உயிரிழந்து மீண்டும் வரவில்லை என்றார்.

முன்னாள் ஜனாதிபதியின் உரையில் அவர் பயன்படுத்தும் தடித்த வார்த்தைகளில் அவரின் வேறு நோக்கம் புரிகிறது. நாம் இருக்கும் வரையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நோக்கம் நிறைவேறாது. ஒழுக்கமாக அரசாங்கத்துடன் இருப்பதாக இருந்தால் இருக்க வேண்டும். இல்லை என்றால் அரசாங்கத்திலிருந்து மைத்திரி விலக வேண்டும் என்றார்.



# கொழும்பில் நீர்வெட்டு

கொழும்பின் சில பகுதிகளுக்கு 16 மணிநேர நீர்வெட்டு நாளை மறுதினம் (08) அமுல்ப்படுத்தப்பட உள்ளதாக தேசிய நீரவழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு, தெஹிவளை கல்கிசை, கோட்டை, கடுவளை ஆகிய மாநகர சபைகளுக்குட்பட்ட பிரதேசங்கள், மஹரகம, பொரலஸ்கமுவ, கொலன்னாவ நகர சபைகளுக்குட்பட்ட பிரதேசங்கள், கொட்டிகாவத்தை, முல்லேரியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் இரத்மலானையில் நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அம்பத்தல நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட உள்ள அவசர திருத்தப்பணிகள் காரணமாக நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீரவழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.



# அடுப்பு வெடிப்புகள் சதியா?

## சந்தேகம் எழுந்துள்ளது என்கிறார் ஜோன்ஸ்டன்

எரிவாயு அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்களின் பின்னணியில் சதி உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, இது தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இச்சம்பவங்கள் தொடர்பில் இரகசிய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், எரிவாயு சிலிண்டர்களை பயன்படுத்த மக்கள் அச்சத்தில் இருப்பதாகவும் இப்பிரச்சினைகள் சில வாரங்களுக்குள் தீர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த புத்தாண்டில் நடைமுறைச்சாத்தியமாக, சிந்தித்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். கொவிட்-19 தொற்று பல பிரச்சினைகளை ஏற்படுத்தியது. அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்துள்ளது. அதனால், பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன என்றார்.



# இறுதி யுத்த துன்பங்களை முழுநாடும் அனுபவிக்கிறது

## சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவிப்பு

சர்வதேச நாடுகளிடம் பிச்சையெடுக்கும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இறுதி யுத்தக் காலத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் அனுபவிக்கக்கூடிய நிலையொன்று ஏற்படுமோ என தான் கவலைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், ஆட்சியைக் கைப்பற்றி தக்க வைத்துக்கொள்வதற்காக, ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த பொருளாதாரமும் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆளுந்தரப்பு அமைச்சர்களே மக்களை அச்சுறுத்தும் வகையிலும் எச்சரிக்கும் வகையிலும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி குறித்து பேச ஆரம்பித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தக் காலப் பகுதிகளில் தமிழ் மக்கள் அனுபவித்த சொல்லொணா துன்பங்களை இன்று நாடு முழுவதிலும் உள்ள மக்கள் அனுபவிக்கும் நிலை ஏற்படுமோ என்கிற கவலை தனக்கிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லா வகையிலும் தோல்வியுற்ற ஓர் அரசாங்கமாக மாத்திரமல்லாமல், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான எத்தகைய வழியுமின்றி தவிக்கும் வீழ்ச்சியடைந்த ஓர் அரசாங்கமாகவும் இன்றைய அரசாங்கம் மாறியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சைக்கிள்கள் வழங்கி வைப்பு...



மேல்மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களின் சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவினருக்கு 300 சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டுவதைப் படங்களில் காணலாம்.

# விற்றோவுக்கு நிதியமைச்சர் அழுத்தம் கொடுக்கின்றாரா?

## முஜிபுர் கேள்வி; உயர்நீதிமன்றம் செல்வோமென எச்சரிக்கை



நிதி அமைச்சரின் அழுத்தம் காரணமாகவா, லிற்றோ நிறுவனம் வாக்குமூலம் வழங்குவதற்கு சி.ஐ.டிக்கு இதுவரையிலும் வரவில்லை என கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், ஐக்கிய மக்கள் சக்தியின் முறைப்பாடுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால், உயர்நீதிமன்றத்துக்கு செல்வோம் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் சமையல் எரிவாயு வெடிப்புகள் தொடர்பில் லிற்றோ நிறுவனத்துக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடை பதிவு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய அக்கட்சியினர் நேற்று முன்தினமும் (05) சி.ஐ.டிக்கு சென்றிருந்தனர். இதன்போது ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த முஜிபூர் ரஹ்மான் எம்.பி, லிற்றோ நிறுவனத்துக்கு எதிராக சி.ஐ.டியில், ஐக்கிய மக்கள் சக்தியினர் முறைப்பாடு செய்து ஒரு மாதம் ஆகிறது. இந்த முறைப்பாடுக்கு அமைய லிற்றோ நிறுவனத்திடம் வாக்குமூலத்தை பெற சி.ஐ.டியினர் அழைப்பு விடுத்துள்ளபோதிலும், ஒருமாதமாகியும் அவர்கள் இதுவரையில் வாக்குமூலம் வழங்க சி.ஐ.டிக்கு வரவில்லை என்றார்.

சமையல் எரிவாயு வெடிப்புகளால் இதுவரையில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். பலரின் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதோடு, பலருக்குக் காயங்களும் ஏற்பட்டுள்ளன என்றார்.

இவ்வாறான நிலையில் லிற்றோ நிறுவனம் என்பது நிதி அமைச்சுக்குக் கீழ் உள்ள அரச நிறுவனமாகும். வாக்குமூலத்தைக் கூட வழங்குவதற்கு இந்நிறுவனம் வரவில்லை என்றால், சமையல் எரிவாயு அடுப்புகள் வெடிப்புக்குப் பின்னால் நிச்சயமாக அரசியல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

நிதி அமைச்சரின் அழுத்தங்கள் இருப்பதாலா, லிற்றோர் நிறுவனம் வாக்குமூலம் வழங்குவதற்கு சி.ஐ.டிக்கு வரவில்லை எனவும் கேள்வி எழுப்பிய அவர், லிற்றோ நிறுவனத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினரால் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். இல்லையேல் நாம் உயர்நீதிமன்றத்துக்கு செல்ல தயாராக இருக்கிறோம் என்றார்.





# முதலாவது அமர்வு...

ராஜகிரியவில் ஸ்தாபிக்கப்பட்ட, பசுமை விவசாய செயற்பாட்டு மையத்தின் முதலாவது அமர்வு அதன் தலைவரும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தலைமையில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றது.

# லிற்றோ, லாஃப்க்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

லிற்றோ, லாஃப் நிறுவனங்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், நாட்டு மக்கள் வீதிக்கு வந்து இந்நிறுவனங்களின் தலைவர்கள், அரசாங்கத்தையும் அடித்து விரட்டும் நிலை ஏற்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், லிற்றோ, லாஃப் சமையல் எரிவாயு நிறுவனங்களின் தலைவர்கள், ஊடகங்களில் பல்வேறு கருத்துகளை கூறிவருகிறார்கள். இவர்களே எரிவாயு இறக்குமதி செய்து, அதனை நிரப்பி விநியோகமும் செய்தனர். ஆனால் ஊடகங்களின் முன்பாக வந்து எதையோ இவர்கள் கூறிகொண்டிருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார். நாட்டில் வாழும் மக்களும் நெஞ்சில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் நாட்டு மக்களை கொன்றொழிக்காது, எரிவாயுவை இறக்குமதி செய்தவர்கள், இதன் கலவையில் மாற்றம் செய்தவர்கள் என அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கம் இதனை செய்ய தவறினால் நாட்டு மக்கள் வீதிக்கு வந்து லிற்றோ, லாஃப் நிறுவன தலைவர்களையும், அரசாங்கத்தையும் அடித்து விரட்டும் நிலை வருமெனவும் அவர் எச்சரித்தார்.

LK Newspapers Viber Community

விசேட சுற்றிவளைப்பு;

# தந்தை கைது; மகன் தப்பியோட்டம்

தலங்கம, தெலிகட ஆகிய இரு பிரதேசங்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, இரு துப்பாக்கிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இவர்களிடமிருந்து ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மீன்பிடி படகுகளில் இவர்கள் போதைப்பொருளை கடத்தி வருவது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலும் இந்த விசேட சுற்றிவளைப்பின்போது பிரதான சந்தேகநபர் தப்பியோடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் பிரதான சந்தேகநபரின் தந்தை போதைப்பொருள் கடத்தலுக்கு உதவியக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அடிப்படைக் கொள்கையை நீக்கி, ஆவணம் தயாரிப்பது

# பொருத்தமற்ற அரசியல்

■ க.விஜயரெத்தினம், இ.சுதாகரன்



“அடிப்படைக் கொள்கையை நீக்கி, ஆவணம் தயாரிப்பது பொருத்தமற்ற தமிழ்த் தேசிய அரசியலாகும்” என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும், பட்டிருப்புத் தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு, வடக்கு மற்றும் கிழக்கு இணைந்த சுய நிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு என்பது தமிழரசுக் கட்சியின் கொள்கையாகவே இன்று வரை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு சமர்ப்பிப்பதற்கென தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து ஆவணம் தயாரிக்கும் முயற்சியில் தமிழரசுக் கட்சி ஏன் பின்னடிக்கிறது என அவரிடம் நேற்று (06) கேட்டபோதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், “சமஷ்டி அடிப்படையிலேயே, சர்வதேசத்தில் யாருக்காவது எழுத்து மூல ஆவணம் அனுப்பபட வேண்டுமே தவிர, அதனை வெட்டிக் குறைத்து, மாற்றம் செய்து அனுப்புவது எமது நிலைப்பாட்டில் தளம்பல் போக்கையே பிரதிபலிக்கும்.

“கூட்டமைப்பு, ஜனநாய ரீதியாக 2009 க்குப் பின்னரும் 2010, 2015, 2020 ஆகிய பொதுத் தேர்தல்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில், வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வையே வலியுறுத்தி வடகிழக்கு மக்களிடம் அதிகூடிய ஆசனங்களை பெற்ற தமிழ்த் தேசியக் கட்சியாக இன்று வரை உள்ளது.

“அந்தக் கொள்கையுடன் பயணிக்கும் கூட்டமைப்பின் பிரதான கட்சியாகவுள்ள தமிழரசுக் கட்சி, தற்போது பல தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் மோடிக்கு எழுத்துமூல ஆவணம் வழங்கும்போது அடிப்படைக் கொள்கையை விட்டு, அதில் யாரையும் திருப்திப்படுத்துவதற்காக முக்கிய விடயங்களை நீக்கி, ஆவணம் தயாரிப்பது தவறு என்பதே தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு” என்றார்.

பாசையூர் குடாக்கடலில்

# 30 அடி உயரத்தில் வெளிச்ச வீடு

## ஐந்துமாடி குடியிருப்பில் இடிதாங்கியும் அமைக்கும் பணிகள் முன்னெடுப்பு

■ எஸ். தில்லைநாதன்

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய, பாசையூர் குடாக்கடல் பகுதியில் வெளிச்சவீடு அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை முன்னெடுப்பது தொடர்பான கள ஆய்வுப் பணிகள், நேற்றைய தினம் (26), யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுதர்சன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

பல தசாப்த காலமாக பாஷையூர், குருநகர், சாவற்கட்டு, காக்கைதீவு, நாவாந்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சங்கமித்து தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பகுதியாக காணப்படும் இந்த இடத்தில் வெளிச்சவீடு இன்மையால் கரையை அடையாளப்படுத்துவதில், பல அசௌகரியங்களை குறித்த கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு இணங்க, கடற்றொழில் அமைச்சால் குறித்த திட்டத்தை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த பகுதிக்கு சென்றிருந்த குழுவினர், குடாக்கடல் பகுதியில் ஏற்கனவே முற்றாக செயலிழந்திருக்கும் வெளிச்ச வீட்டின் நிலைமைகளை பார்வையிட்டதுடன், அந்த இடத்திலேயே புதிதாக 30 அடி உயரமான புதிய வெளிச்சவீடு ஒன்றை கட்டுமாணம் செய்வதற்கான முன்னாயத்த செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.



சுமார் 4 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படும் குறித்த கட்டுமாணப் பணி சுமார் 15 நாள்ளுக்கும் நிறைவுறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணம் ஐந்து மாடி குடியிருப்பு பகுதி மக்களின் பாதுகாப்பு கருதி குறித்த பகுதியில் உள்ள நீர்த்தாங்கியில் இடிதாங்கி அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த முன்னெடுக்கப்படும் குறித்த பணிகளையும், நேற்று, யாழ்ப்பாணம் பிரதேச செயயாளர் சுதர்சன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

குறித்த திட்டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டில் 5 இலட்சம் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஓட்டோவில் ஆடுகள் கடத்தல்

## நால்வர் சிக்கினர்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலை நகர் பகுதியில் நேற்று முன்தினம் (05) ஓட்டோவில் வந்த நால்வர், அங்கு மேய்ந்து திரிந்த இரண்டு ஆடுகளை திருடிச் சென்றுள்ளனர்.

அந்நபர்களை,சி.சி.டி.வி கமெராவின் உதவியுடன் அடையாளம் கண்டு கொண்ட பிரதேச மக்கள், அவர்களை பிடித்து வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக ஆடுகள் திருடப்பட்டு வருவதாக ஆடுகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட

# புதிய அரசாங்க அதிபர் பதவியேற்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஜே.எம்.ஏ.டக்ளஸ், மாவட்டச் செயலகத்தில் நேற்று (06) தமது கடமையை பதவியேற்றுள்ளார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக முன்னர் கடமையாற்றிய டி.எம்.எல். பண்டாரநாயக்க, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டதையடுத்து, மாகாண சபைகள் உள் ளூராட்சி அமைச்சால் புதிய அரசாங்க அதிபராக ஜே.எம்.ஏ. டக்ளஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில், பிரதேச செயலாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.





# தொடரும் காத்திருப்பு

அம்பாறை, நிந்தவூரில் சமையல் எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்வதற்காக கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்களைப் படங்களில் காணலாம்.
(படப்பிடிப்பு - நூருல் ஹுதா உமர்)







# அடிக்கல் நாட்டல்...

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைக்கப்படவுள்ள 'மடு மாதா' வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற்று (6) காலை 10 மணியளவில், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.
(படப்பிடிப்பு: எஸ்.றொசேரியன் லெம்பேட்)



# அடுப்பு வெடித்ததில் வீடு எரிந்து நாசம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தரவான் கோட்டை பகுதியில், கூலி தொழிலில் ஈடுபடும் பெண்ணொருவரின் வீட்டில், நேற்று வியாழக்கிழமை(06) மதியம் எரிவாயு அடுப்பொன்று வெடித்துள்ளது.

இதனால், அவ்வீடு எரிந்து முற்றுமுழுதாக நாசமாகியுள்ளது. அதனை கண்டு அதிர்ச்சியடைந்த அப்பெண், மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தனிமையில் வசித்துவரும் அப்பெண், பனம் பொருள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். சம்பவத்தை அடுத்து விரைந்த கிராம மக்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். எனினும், வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பலாகியுள்ளது.

மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் , நகர சபை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலைய

# பொறுப்பதிகாரிக்கு உடனடி இடமாற்றம்



■ க. அகரன்

வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், நேற்று முன்தினம் (05) இரவோடு இரவாக திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவரது விடுதி பகுதியில், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி முதல் செயற்பட்டு வந்த, பீ.பீ.மானவடுக்கு, உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேவை கருதிய அவசர இடமாற்றமாக குறித்த இடமாற்றம் இரவோடு இரவாக வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், கொஸ்வத்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக அவர் இடமாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது விடுதி முன்பாக, இரவு இனந்தெரியாத நபர்களால் பட்டாசுகள் கொளுத்தப்பட்டன.

இதனையடுத்து, அவரது விடுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘எளிமைமிகு பரிபாலக ஆளுமை’ வெளியீடு

■ எஸ். தில்லைநாதன்

வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் எழுதிய ‘எளிமைமிகு பரிபாலக ஆளுமை’ என்ற கைநூல் வெளியீடு, 17ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு, நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பரிபாலகர் அமரர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நற்செயற்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக, இந்த நூல் அமைந்துள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ். மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றிய செயலாளர் இ. இரத்தினசிங்கம் வரவேற்புரையும், நிகழ்வில் நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் உட்பட பலரும் பங்கேற்கவுள்ளனர்.



# இறக்காமத்தில் காணிக் கச்சேரி

■ நூருல் ஹுதா உமர்

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இறக்காமம் - 03, 05, 08 மற்றும் வரிப்பத்தான்சேனை - 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு ஏற்கெனவே காணிக் கச்சேரி நடத்தப்பட்டிருந்தது.

எனினும், குறித்த காணிக் கச்சேரிகளுக்கு தகுந்த காரணங்களால் வருகை தராதவர்களுக்கான காணிக் கச்சேரி, பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில், உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல் தலைமையில் நேற்று (06) நடைபெற்றது. இதன்போது பொதுமக்கள், தங்கள் காணிப் பிரச்சினை தொடர்பாக நேரடியாக உரிய அதிகாரிகளின் கவத்துக்குக் கொண்டுவந்து, தீர்வைப் பெற்றுக்கொண்டனர்.

அரசாங்க வெளியீட்டு

# பணியகம் திறந்து வைப்பு

■ ஹஸ்பர் ஏ.ஆர்.எம்.றிபாஸ்

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க வெளியீட்டு பணியகம், வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் நேற்று (06) திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வும் நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, தகவல் திணைக்கள பணிப்பாளர், முன்னால் மாகாண அமைச்சர் ஆரியவதி கலபதி, உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



LK Newspapers Vibe Community



டெல்டா தோட்டத்திலும்

# அடுப்பு வெடித்தது

■ திருஞானம்

புப்புரஸ்ஸ- டெல்டா தோட்டம் ஸ்டேசன் பிரிவிலுள்ள வீடொன்றில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் நேற்று முன்தினம் (5) இரவு 8 மணியளவில் உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த போதே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தால், வீட்டில் இருந்த எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த புப்புரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

# கோதுமை நிவாரணம் தேவையற்றது

### மத்திய மாகாண முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு

■ எஸ்.சதீஸ்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா நிவாரணம் என்பது தேவையற்றது எனத் தெரிவித்துள்ள மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சோ.ஸ்ரீதரன், கோதுமை மாவை விட விஷேட நிவாரண நிதியே தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் (5) நடைப்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தொடர்ந்து தெரிவித்த அவர், சுகாதாரம் மற்றும் போசனை பிரிவின் கூற்றுபடி கோதுமை மா சத்தற்ற ஓர் உணவு பொருளாகும். கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் எந்த உணவினையும் உட்கொள்ளும் போது மனிதனுக்கு எந்தவித சக்தியும் கிடைப்பதில்லை. அந்தவகையில் தோட்டத் தொழிலாளர்கள் கோதுமை மாவிற்கு அடிமைபட்ட சமூகம் என்பதை இந்த அரசாங்கமும் மலையக தலைமைகளும் ஒப்புவிக்கப் பார்கிறார்கள் என்றார்.

எனவே, இந்த அரசாங்கம் பெருந்தோட்ட நிறுவனங்களோடு பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொண்டு, தோட்டத் தொழிலாளர்களுக்கு, விஷேட நிவாரண நிதியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# உறைகள் தயாரிப்பு இடைநிறுத்தம்

### விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர் கவலை

■ மஹேஸ் கீர்த்திரத்ன



மாத்தளை மாவட்டத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த, மருந்து உறைகளைத் தயாரிக்கும் திட்டமானது, இடைநிறுத்தப்பட்டுள்ளதாக விசேட தேவையுடைய குழந்தைகளின் பெற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் அதிகளவான விசேட தேவையுடைய பிள்ளைகள் இருக்கின்றனர். இந்தப் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே, இவ்வாறான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இவ்வாறு தயாரிக்கப்படும் மருந்து உறைகள் மத்திய மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்துள்ள நிலையிலே, இத்திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயம் தொடர்பில் மத்திய மாகாண ஆளுநருக்கு பெற்றோர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதுடன்,இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# ‘கோதுமை கொச்சை’


### கடுமையாக சாடுகிறார் இராதா

■ டி.ஷங்கீதன்

எங்களுடைய பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு நாளைக்கு 500 கிராம் கோதுமை மாவை கொடுத்து ,அவர்களை, அரசாங்கம் கொச்சைப்படுத்தி விட்டது என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வழங்கியுள்ள சலுகைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு வெறுமனே 500 கிராம் கோதுமை மாவை குறைந்த விலைக்கு கொடுப்பதை விட்டுவிட்டு, பொருட்களின் விலைகளை குறைத்து அதனை தட்டுப்பாடு இல்லாமல் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.



அரசாங்கம் என்ன செய்கின்றது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. இந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தான் அரசாங்கத்திற்கு சுமையாக இருக்கிறார்கள் என கூறியவரே அவர்களுக்கு மாதாந்தம் 5,000 பெற்றுக் கொடுப்பதாக கூறுகின்றார்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களை, இந்த நாட்டு மக்கள் மத்தியில் அவமானப்படுத்திவிட்டு, இன்று அவர்களை சமாளிப்பதற்காக பணத்தை அச்சடித்து மேலதிக கொடுப்பனவாக 5,000 ரூபாயை வழங்குவது எந்தவிதத்தில் நியாயமானது என்பது புரியவில்லை என்றார்.





# இயந்திரங்கள் கையளிப்பு...



பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக, பதுளை - தெல்பெத்தை கலைவாணி தமிழ் மற்றும் பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலங்களுக்கு தலா ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரங்கள் ஒவ்வொன்று வைபரீதியாக வழங்கி வைக்கப்பட்டன. (எம். செல்வராஜா)

கந்தப்பளை–கோணப்பிட்டிய போக்குவரத்து

# வழமைக்குத் திரும்பியது

■ ஆ.ரமேஸ்

மண்சரிவால் போக்குவரத்துக்கு தடையேற்பட்டிருந்த கந்தப்பளை- கோணப்பிட்டிய வீதியுடனான போக்குவரத்து நேற்று (6) பகல் 1 மணிக்கு வழமைக்குத் திரும்பியுள்ளது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டிருந்த வீதியை சீர் செய்யும் பணிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும், கோணப்பிட்டிய இளைஞர்களும் இணைந்து முன்னெடுத்தனர்.

எனினும், இவ்வீதியில் மேலும் அனர்த்தங்களை தடுப்பதற்காக குறித்த வீதியிலுள்ள பிரதான பாலத்தில் உள்ள குறைப்பாடுகளை சரி செய்து, அச்சமின்றி பயணிக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கைவிடப்பட்ட வீடுகளுக்கு

# அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன

■ கே.சுந்தரலிங்கம்

அக்கரப்பத்தனை- வேவர்லி தோட்டத்தில் நல்லாட்சியின் போது நிர்மாணிக்கப்பட்டு, எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாமல் கைவிடப்பட்ட சுமார் 81 வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

“இந்த விடயம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து, குறித்த வீடுகளுக்கான மின்சாரம், நீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன” என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்ஸின் உப செயலாளர் சிவப்பிரகாசம் சச்சிதாநந்தன் தெரிவித்தார்.

மொட்டுக்குள் மோதல்

# ஒருவருக்குப் பிணை

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டி மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது, உறுப்பினர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதற்கமைய, சந்தேகநபர் நேற்று முன்தினம் (5) கண்டி மேலதிக நீதவான் நீதிமன்றில் கண்டி பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார். 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், மீண்டும் மே மாதம் 4ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி, கண்டி- மாநகர சபையில் நடைபெற்ற வரவு- செலவுத்திட்ட விவாதத்தின் போது, அச்சபையின் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்த குறித்த உறுப்பினர், சபையில் கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் ஒருவரையே தாக்கியுள்ளார்.

இதன்போது தாக்குதலுக்கு உள்ளான உறுப்பினர் கண்டி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வெல்லவாயவில் மாயமான மோட்டார் சைக்கிள்

# மாலபேயில் சிக்கியது

■ சுமணசிறி குணதிலக

வெல்லவாய நகரிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று, கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி காணாமல் போயிருந்தது. இந்நிலையில், அந்த மோட்டார் சைக்கிளானது, மாலபே பிரதேசத்தில் இருந்து நேற்று முன்தினம் (5) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அந்த மோட்டார் சைக்கிள், வாரியபொல பிரதேசத்தில் இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, மொனராகலை பொலிஸார் வாரியபொல பிரதேசத்துக்குச் சென்றுள்ளனர்.

எனினும், அந்த மோட்டார் சைக்கிள் மாலபே பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக அறிந்துகொண்ட பொலிஸார், மாலபே பிரதேசத்துக்குச் சென்ற போது, மோட்டார் சைக்கிளுடன் சந்தேகநபர் தப்பிச் செல்வதை அவதானித்துள்ளனர்.

பின்னர் மோட்டார் சைக்கிளை துரத்திச் சென்ற பொலிஸார், சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், போதைப் பொருளுக்கு அடிமையான 29 வயதுடையவர் என்றும், இவர் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, சந்தேகநபருடன் மோட்டார் சைக்கிளும் மொனராகலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

LK Newspapers Viber Community

# டெங்கொழிப்பில் கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயமாகும்

நாட்டின் பல பாகங்களில் மழை பெய்து ஓய்ந்திருக்கின்றது. இன்னும் சில மாவட்டங்களில் அடைமழை பெய்து கொண்டே இருக்கிறது. வெள்ளமும் தாழ்நிலங்களை நிரப்பியுள்ளது. வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியதைப் போல, ஏழு மாவட்டங்களில் அவ்வப்போது மழை பெய்கிறது. சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்து கொண்டிருக்கின்றது.

வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழை தீவிரமடைவதால், நாட்டின் கிழக்குப் பகுதியில் கடும் மழை பெய்யக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே, கடும் மழையும் சில பிரதேசங்களில் 100 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளது. இதனால், குளங்கள் நிரம்பிவழிகின்றன.

விவசாய விளைநிலங்கள் இந்த மழையால் ஈரமாகியிருந்தாலும், அந்த நிலங்களில் பயிரிடும் விவசாயிகளின் மனங்கள் இன்னும் வறண்டே இருக்கின்றன. உரப்பிரச்சினையில் இருந்து மீண்டெழ முடியாமல் தவிக்கும் விவசாயிகளின் கனவில், இந்த உரப்பிரச்சினை மண்ணை வாரியிறைத்து விட்டது.

போகங்களைப் பிரித்துப் பயிரிடும் விவசாயிகள், அடுத்தடுத்த போகங்களைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. இருப்பதையும் முதலிட்டு நட்டமடைவதை விடவும், விளைநிலங்களுக்குச் செல்வதைப் பலரும் தவிர்த்துவருகின்றனர். இதனால்தான், மரக்கறி உள்ளிட்ட தானியங்களுக்கு கடுமையான தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. எதிர்காலத்திலும் தட்டுப்பாடுகள் நீடிக்குமென அச்சம் கொள்ளப்படுகின்றது.

மழைக்கு ஏங்கியிருந்த விவசாயிகள், மழை பெய்தாலென்ன, பெய்யாவிட்டால் என்ன என்றிருக்கின்றனர். ஆனால், பெய்த மழைநீர் ஆங்காங்கே தேங்கி நிற்பதாலும், சுற்றுச்சூழல் நீண்ட நாள்களாகச் சுத்தம் செய்யாமையாலும், வெற்றுப் பேணிகள், சிரட்டைகள் உள்ளிட்ட இன்னும் பல பொருட்களில் மழைநீர் தேங்கியிருக்கிறது. இவை, டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றன.


இதனால்தான், கடந்த ஐந்து நாள்களில் 1,227 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொரோனாவுடன் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், டெங்கு காய்ச்சலும் ஏற்படுமாயின் நாட்டின் சுகாதாரத்துறை பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

"ஒவ்வொரு வீடுகளிலும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையிலும் டெங்கொழிப்பு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்" என டெங்கொழிப்பு பிரிவின் விசேட வைத்தியர் அனோஜா டீரசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

அறிவுரைகளுக்கு செவிமடுத்து அதன்படி செயற்பட்டிருந்தால், ஒவ்வொரு பிரச்சினைகளில் இருந்தும் ஓரளவுக்கேனும் தப்பியிருக்கலாம். ஆகையால், காலம் கடந்துவிடவில்லை என்பதால், சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கான பணியை இன்றிலிருந்தாவது ஆரம்பிப்போம்.

புத்தாண்டு பிறந்து ஐந்து நாள்களில் 1,227 டெங்கு நோயாளர்களும் கடந்த வருடத்தில் 35,924 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். அதில், 25 சதவீதமானோர் டிசெம்பர் மாதத்தில் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழிப்பது மட்டுமன்றி, காய்ச்சல் ஏற்படுமாயின் 24 மணி நேரத்துக்குள் வைத்தியரை நாடவேண்டும். அத்துடன், பாடசாலைகளும் அடுத்தவாரம் முழுமையாக ஆரம்பிக்கவிருப்பதால், பாடசாலை சுற்றாடலையும் சுத்தம் செய்வது நிர்வாகத்தின் பொறுப்பாகும் என்பதுடன், டெங்கொழிப்பில் கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயமாமென்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சில விடயங்களைக் கண்டு கொள்ளாமலும் தெரிந்து கொள்ள விரும்பாமலும் இருப்பது நல்லது.

வதந்திகளையும் மனச்சாட்சியே இல்லாமல், தவறான செய்திகளை எவர் பேசினாலும் செவிமடுக்கக் கூடாது. சில நபர்களுக்கு வதந்திகளைப் பரப்புவதே தலையாய கடமையாகும்.

காணக்கூடாத வீண் சண்டைக் காட்சிகளைச் சந்தியில் காண்பிக்கும் நபர்களின் பார்வையில் இருந்து விலகிவிடுங்கள். அந்த நேரங்களில் ஆபாசமான வார்த்தைகளை பொழிவார்கள். எனவே, கெட்டதைச் செவிமடுக்காமல், நகருவது புத்திசாலித்தனம்.

வலிந்துவந்து, உங்கள் நல்ல கருமங்களில் குறுக்கீடு செய்பவர்களிடம் பேசாமல், கோபப்படாமல் சென்று விடுவது சிறப்பானது. ஊர் வம்பு பேசுபவர்களைத் தவிர்ப்பது உங்கள் திறமை.

நல்லதைப் பேசுவதும் சிறப்பான காட்சிகளை ரசிப்பதும் இசை, சங்கீதங்களைக் கேட்பதும், உங்கள் இதயங்களுக்கு குளிர்மையூட்டும். வலிந்து வினை தேடவேண்டாம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மங்கை நகரை பாருங்கள்

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மங்கை நகர் கிராமத்திலுள்ள குடும்பங்கள், அன்றாட தொழில் வாய்ப்புகள், வாழ்வாதார வசதிகள் இன்மை உள்ளிட்ட பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

மங்கை நகர் கிராமத்தில் 343 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 48 பேர், தற்போது வாழ்ந்து வருகின்றனர். அந்தக் குடும்பங்கள், 20 வருடங்களுக்கு மேலாக வயற்காணிகள் எதுவும் இல்லாத நிலையில், தொடர்ந்து கூலித் தொழிலையே நாளாந்த வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

பொருட்களின் விலையேற்றம், தொழில் வாய்ப்பின்மை காரணமாக இந்தக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற குடியிருப்பு வீதிகள் எதுவும், இதுவரை புனரமைக்கப்படவில்லை. இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக, இந்தக் கிராமத்தில் உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களில் அதிகமானோர், போசாக்கின்மையுடன் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நிலைமையானது எதிர்கால சந்ததியினரின் செயற்பாடுகளையே கேள்விக் குறியாக்கி விடும். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மங்கை நகர் மக்களின் அடிப்படை தேவைகள் குறித்து, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

-யது பாஸ்கரன்



ஸ்ரீலங்கா முதல் சிங்கலே வரை – I

# அரைநூற்றாண்டின் கதை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இவ்வாண்டோடு இலங்கை, 'ஸ்ரீலங்கா' என்ற பெயரைச் சூடி, 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. கடந்த அரைநூற்றாண்டு கால இலங்கை வரலாற்றில், அதிகம் பேசப்படாத பக்கங்கள் பல உண்டு. இனமுரண்பாடு கூர்மையடைந்து, நீண்ட போராகி, சிங்கள-பௌத்த பெருந்தேசிய அகங்காரத்தின் வெளிப்பாடாகி, சிறுபான்மையினரின் இருப்பே சவாலுக்குள்ளாகும் நிலையை இப்போது எய்தியுள்ளது. இம்மாற்றம் ஓரிரவில் நடந்துவிடவில்லை.

சுதந்திரத்துக்குப் பின்னைய, பின்கொலனிய இலங்கையில், சிங்களத் தேசியவாதம், சிங்கள -பௌத்த தேசிய வெறியாகி, பெருந்தேசிய அகங்காரமாகப் பரிமாணம் கண்டது. இக்காலப்பகுதியில், சொல்லப்படாத கதைகள் பலவுண்டு. அவை விடுபட்டுப் போனதற்கான காரணங்கள் உண்டு. அவற்றை ஆராயும் முயற்சியே, 'ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை' என்ற இத்தொடராகும்.

வரலாறு என்பதை, வெறும் நிகழ்வுகளின் பதிவுகளாக மட்டும் பார்க்கப் பழக்கப்பட்டு விட்டோம். இது, இரண்டு ஆபத்துகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஒன்று, நிகழ்வுகளைத் தனித்து நோக்கும் ஒரு பண்பு வளர்ந்திருக்கிறது. இது தொடர்பறுந்த நிலையில், வரலாற்று வளர்ச்சியின் பாற்பட்டு, நிகழ்வுகளை நோக்கும் அபத்தத்தத்துக்கு வழியமைக்கிறது.

இரண்டாவது, பதியப்பட்ட நிகழ்வுகளை மட்டும் வரலாறாக நோக்கும் தன்மை. வரலாற்றில் எது பதியப்படுகிறது; எது விடுபடுகிறது; திரித்தோ மாற்றியோ எது எழுதப்படுகிறது; எது திட்டமிட்டு மறைக்கப்படுகிறது; எது திட்டமிட்டு புனையப்படுகிறது என்பன பற்றிய புரிதலே, வரலாறு குறித்த ஒரு சரியான பார்வையை எமக்குத் தரும்.

மறைக்கப்பட்ட, விடுபட்ட நிகழ்வுகள் எவை; கதைகள் எவை; அவை ஏன் தவிர்க்கப்பட்டன போன்ற கேள்விகளே அவசியமானவை.

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை வரலாற்றின் கதையாடல், இனமுரண்பாட்டின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது; இன்றும் அவ்வாறே கட்டமைக்கப்படுகிறது. ஒரு வகையில் இது இயல்பானது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த ஆயுத மோதலும் உயிரிழப்புகளும் இலங்கை சமூகத்தின் பொதுப்புத்தியில், இனமுரண்பாட்டைத் தவிர்க்கவியலாத ஒன்றாக மாற்றியுள்ளன. ஆனால், இலங்கையின் கடந்த அரை நூற்றாண்டு கால வரலாறு, வெறுமனே இனமுரண்பாடு சார் நிகழ்வுகளால் மட்டும் நிறைந்ததல்ல!

சமூகம், பொருளாதாரம், பண்பாட்டு ஆகியவற்றின் அடிப்படைகளில், இலங்கை மிகப் பாரிய மாற்றங்களைக் கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் கண்டுள்ளது. முன்னிலை அடைந்த இனமுரண்பாட்டின் விளைவுகளால், இந்த மாற்றங்கள் பெரியளவில் கவனம் பெறவில்லை.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடியை, ஓர் உதாரணமாகக் கொண்டால், 1970களில் தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கொண்டதொரு நாடு, இன்று அனைத்தையும் இறக்குமதி செய்யும் நிலைக்கு ஆளாகியிருக்கிறது.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு கொண்டமைந்திருந்த இலங்கையின் இன்றைய நிலை, மௌனமாய்ச் சொல்லுகிற செய்திகள் உண்டு. சுதந்திரத்துக்கு முன்னர், 1947ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியலமைப்புக்குப் பதிலாக, 1972ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி, புதிய அரசியலமைப்பை இலங்கை பாராளுமன்றம் நிறைவேற்றியது. இது 157 ஆண்டுகால பிரித்தானிய முடியின் தலைமைத்துவத்தை, முடிவுக்குக் கொண்டு வந்து, இலங்கையை குடியரசாக அறிவித்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில், 'சிலோன்' என அறியப்பட்ட இலங்கை, புதிய அரசியலமைப்பின் வாயிலாக 'ஸ்ரீ லங்கா குடியரசு' என அறிவிக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு, இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியமான திருப்புமுனையாகும். இவ்வரசியலமைப்பு வெறும் ஆறு ஆண்டுகளே நிலைத்தாலும், இலங்கை அரசியலில் குறிப்பாக, தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்விலும் இனக் குழுமங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்கும், தடையாக உள்ள 'ஒற்றையாட்சித் தத்துவம்', 'பௌத்தம் தேசிய மதம்' ஆகியன, இந்த யாப்பினூடே அறிமுகம் செய்யப்பட்டன.

இவ்வரசியல் யாப்பை உருவாக்கும் குழுவுக்குத் தலைவராக இருந்த கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா, 1956இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா, தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, 'இரு மொழிகள் ஒரு தேசம்; ஒரு மொழி இருதேசம்' என்ற புகழ்பெற்ற வாக்கியத்தை உதிர்த்திருந்தார். ஆனால், அவரால் வழிநடத்தப்பட்ட இப்புதிய அரசியலமைப்பிலும் தனிச்சிங்களச் சட்டம் நிலைபெற்றது.

'சிலோன்' என்ற பிரித்தானியர் காலப் பெயரில் இருந்து, 'ஸ்ரீ லங்கா' என்ற பெயரைத் தெரிந்தமைக்கு இரண்டு பிரதான காரணிகள் சொல்லப்படுகின்றன.

முதலாவது, இலங்கையில் 'லங்கா' என்ற பெயரை, மக்கள் மயமாக்கியது லங்கா சமசமாஜக் கட்சியாகும். இலங்கையின் முதலாவது அரசியல்கட்சியான இக்கட்சி, 1935 இல் உதயமானது. ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து, எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, 1952இல் உருவாக்கிய கட்சிக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்று பெயரிட்டார். இவ்வாறே இலங்கை அரசியலில், 'ஸ்ரீ லங்கா' என்ற பெயர் நுழைந்தது.

1970 தேர்தலில் வென்று, புதிய அரசியலமைப்பை முன்னெடுத்த பிரதமர், பண்டாரநாயக்கவின் பாரியார் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆவார். கொல்வின் ஆர்.டி. சில்வா, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர். இதன்காரணமாகவும் இலங்கை, 'ஸ்ரீ லங்கா' என்ற பெயரைச் சூடிக் கொண்டது.

இரண்டாவது, இலங்கையின் சிங்கள வரலாற்று ஏடுகளில் உள்ள 'லங்காதுவீப' பெயரைப் பயன்படுத்துவது என்று, யாப்புக்குழுவில் ஏகமனதாக முடிவானது. , ஸ்ரீ லங்கா என்று இலங்கை பெயர்மாற்றம் பெற்றாலும், 'சிலோன்' என்ற பெயர், இன்னமும் பல நீடிப்பதை அவதானிக்கலாம்.

எமது தேயிலை, இன்றும் Ceylon Tea என்றே அறியப்படுகிறது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை போன்றவற்றில் முன்னொட்டாக 'சிலோன்' ஒட்டியிருப்பதைப் பார்க்கலாம்.

பெயரில் என்ன இருக்கிறது என்று நீங்கள் நினைக்கக்கூடும். இன்றும் 'ஸ்ரீ லங்கா' என்ற பெயர் ஆங்கிலத்தில் Sri Lanka என்றே எழுதப்படுகிறது. 1992ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாஸ, இலங்கையின் பெயரை ஆங்கிலத்தில் Shri Lanka என்று எழுதவேண்டும் என்று பணித்தார்.

எண்கணித சாஸ்திரப்படி Sri Lanka என்று எழுவது, இலங்கைக்கு உகந்ததல்ல என்று, சோதிடர்கள் கூறியதையடுத்து இம்மாற்றம் நிகழ்ந்தது. இதேபோல, ஜனாதிபதியை சிங்களத்தில் 'அதிகரு' என்று அழைப்பர்; பிரேமதாஸ அதை 'ஸ்ரீமத்' என்றும், 'விபக்சய' என்று அழைக்கப்பட்ட எதிர்க்கட்சியை 'பிரதிபக்சய' என்றும் மாற்றினார்.

அவரது மரணத்தின் பின்னர், ஜனாதிபதியான டிங்கிரி பண்டா விஜயதுங்க, பழைய பெயர்களை மீட்டும் கொண்டுவந்தார். இலங்கை அரசியலில் நேரடியாகவே ஜோதிடம் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிய காலம் பிரேமதாஸாவினுடையது எனலாம். நல்ல நேரமும் இலங்கை அரசியலும் இப்போது பின்னிப் பிணைந்தவை. அது திருப்பதி முதல் மலையாள மாந்திரீகர்கள் வரை தொடர்கிறது. அதை இன்னொரு முறை பார்க்கலாம்.

1993ஆம் ஆண்டு, தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது, இலங்கை ஒருநாள் அணியின் ஜேர்சியில் Shri Lanka என்றே எழுதப்பட்டிருந்தது. இருநாடுகளுக்கு இடையேயான ஒருநாள் போட்டிகளின் காணொளிகளில் இதைக் காணலாம்.

இங்கும் ஒரு சுவையான நிகழ்வு உண்டு. 1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி பிரேமதாஸா படுகொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து, அவ்வாண்டு ஜூலை/ ஓகஸ்ட்டில் இந்திய அணி இலங்கைக்கு விஜயம் செய்தது. அப்போது நடைபெற்ற ஒருநாள் போட்டித்தொடரில், இலங்கை அணி பயன்படுத்திய ஜேர்சியில் எதுவித பெயரும் இடம்பெற்றிருக்கவில்லை. அணியின் பெயரற்ற ஜேர்சிகளுடனேயே இலங்கை அணி விளையாடியது. இதையடுத்த தென்னாபிரிக்க அணியுடனான போட்டிகளிலேயே இலங்கை அணி Shri Lanka என்ற பெயர் பொறித்த ஜேர்சியில் விளையாடியது.

அதைத் தொடர்ந்து அவ்வாண்டு நவம்பர் மாதம், இந்தியாவில் இடம்பெற்ற 'ஹீரோ' கிண்ணப் போட்டித்தொடரில், இலங்கையணி Sri Lanka என்ற பெயர்பொறித்த ஜேர்சியுடனேயே விளையாடியது. இவற்றைச் சூழ்ந்து நிகழ்ந்த சம்பவங்களும் சுவையானவை. இவை, இலங்கையின் ஜோதிட அரசியலோடு மட்டுமே பின்னிப் பிணைந்தவையல்ல என்பதைக் காட்டுபவை.

புத்தர், இந்துமதத்தை வெறுத்து சிந்தனைக்குரிய ஒரு முற்போக்குத் தத்துவமாக பௌத்தத்தை வளர்த்தெடுத்தார். அரசணையை வெறுத்துத் துறவுபூண்டார். இலங்கையில் அத்தத்துவம் மதமாகி, நிறுவனமயமாகி பிறவற்றின் பிற்போக்கு அம்சங்களை உள்ளீர்த்து, அரசணையில் முதலில் மறைமுகமாயும் இப்போது நேரடியாகவும் செல்வாக்குச் செலுத்துகிறது.

இதற்கு கடந்த 50 ஆண்டு கால இலங்கை நிகழ்வுகள் பங்களித்துள்ளன. அரசியலில் முதன்மையான இடத்தை, பிக்குகள் எவ்வாறு பெற்றார்கள். குறிப்பாக, இலங்கையின் இரண்டாவது பிரதமரைக் கொலை செய்த பின்னரும், அவர்களுக்கான தனித்துவமான இடம் எவ்வாறு சாத்தியமானது. அரைநூற்றாண்டின் கதை இங்கே தொடங்குகிறது.

LK Newspapers Viber Community

சென்னை

ஞாயிற்றுக் கிழமைகளில்

# முழு ஊரடங்கு

தமிழகத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளதாக தமிழக மருத்துவத்துறை அமைச்சர் அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "தமிழகத்தில் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வருகிறது. குறிப்பாக சென்னையில் பாதிப்பு நாளுக்கு நாள் வேகமாக அதிகரித்து வருகிறது. அத்துடன் தற்போது ஒமைக்ரோன் தொற்றுப் பரவலும் அதிகரித்து வருவதால்,




தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் தடுப்பூசி முகாம் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் " என்றார்.

ஜார்க்கண்ட்



பஸ் – கனரக வாகனம் மோதி விபத்து;

# 17 பேர் உயிரிழப்பு

ஜார்க்கண்ட் மாநிலத்தின் டியோகர் மாவட்டத்தில் உள்ள ஜஸ்தீ எனுமிடத்தில், பஸ்ஸொன்றுடன் சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றி வந்த கனரக வாகனமொன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 17 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (5) இடம்பெற்ற இவ்விபத்தில் 26 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்து இடம்பெற்ற பகுதியில் காணப்பட்ட பனிமூட்டம் காரணமாக எதிரே வந்த வாகனங்கள் தெரியாமல் இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

முகக் கவசத்தால் அதிகரித்த அபராதம்;

# 4 இலட்சம் ரூபாவைக் கடந்தது

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா மற்றும் ஒமைக்ரோன் தொற்று அதிகரித்து வரும் நிலையில், அதனை தடுக்கும் நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி தீவிரப்படுத்தி வருகின்றது.

சென்னையில் நேற்று முன்தினம்(5) மாத்திரம் முகக்கவசம் அணியாத 2,286 பேரிடம் இருந்து இந்திய மதிப்பில் 4.83 இலட்சம் ரூபாய் அபராதமாகப் பெறப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி தி முதல் தற்போது வரை 12.54 இலட்சம் ரூபாய் அபராதமாகப் பெறப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கன்னியாகுமரி



# தோழிக்கு ஆபாசம் அனுப்பியதால் விபரீதம்

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த யுவதி ஒருவர், தான் குளிக்கும் காட்சியை புகைப்படமெடுத்து தனது நண்பிக்கு அனுப்பி வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த புகைப்படத்தை அத் தோழி தனது ஆண் நண்பர்களுக்கு பகிர்ந்துள்ளதாகவும், அவர்களில் ஒருவர் குறித்த யுவதியை தொடர்பு கொண்டு அவரது புகைப்படத்தை இணையத்தில் வெளியிட்டு விடுவதாகக் கூறி அடிக்கடி அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்து பாதிக்கப்பட்ட யுவதி பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கவே இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஐவர்

மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி

# ரவுடி பேபி சூர்யா, சிக்கா கைது

டிக் டொக் மூலம் பிரபலமானவர் ரவுடி பேபி சூர்யா. இவர் தனது ஆண் நண்பரான சிக்கா என்ற சிக்கந்தருடன் இணைந்தும் பல ஆபாசமான வீடியோக்களை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

மேலும் அண்மைக்காலமாக இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறி ஆபாசமாகப் பேசும் வீடியோக்களையும் தமது யூடியூப் தளத்தில் வெளியிட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சமூக வலைத்தளங்களில் அருவருக்கத் தக்க வகையில் ஆபாசமாக வீடியோக்களை



பதிவிட்டு வருவதாகக்கூறி பெண் ஒருவர், இவர்கள் இருவர் மீதும் சென்னை சைபர் கிரைம் பொலிஸாரிடமும் தமிழக டி.ஜி.பி. அலுவலகத்திலும் புகார் அளித்துள்ளார்.

இதனையடுத்து கோவை சைபர் கிரைம்பொலிஸார் ரவுடி பேபி சூர்யாவையும், சிக்கந்தரையும் மதுரையில் வைத்து கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர்

# ஐவரை கொளுத்தியது பட்டாசு

விருதுநகர் மாவட்ட சாத்தூர் அருகே உள்ள பட்டாசுத் தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் (5) ஏற்பட்ட வெடி விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் தொழிற்சாலையில் இருந்த இரண்டு அறைகள் இடிந்து தரைமட்டமானதாகவும், இதன்போது கட்டிட இடிபாடுகளில் சிக்கிய 7 பேர் மீட்கப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதில் ஐவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு நிவாரணமாக



தலா 3 லட்சமும் ரூபாவும் , காயமடைந்தவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாவும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

GHC உறுதி செய்யப்பட்ட கோழிப்பண்ணை நிறுவனம்

# நியு அந்தனீஸ் பார்ம்ஸ்

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைபேறான செயன்முறைகளை பின்பற்றுவதை உறுதி செய்யும் வகையில், நியு அந்தனீஸ் பார்ம்ஸ் (பிரைவட்) லிமிடெட், பெருமைக்குரிய Greenhouse Gas (GHG) சான்றிதழைப் பெற்றுள்ளது. ISO 14064-1:2018 நியமங்களுக்கமைய உறுதி செய்யப்பட்டு, நெதர்லாந்தைச் சேர்ந்த கட்டுப்பாட்டு யூனியன் சான்றளிப்பு அமைப்பிடமிருந்து இந்த சான்று வழங்கப்பட்டுள்ளது.

இதனூடாக, நாட்டின் முதலாவது ஒரே GHG (Greenhouse Gas) சான்றிதழைப் பெற்ற கோழி இறைச்சி உற்பத்தியாளராக நியு அந்தனீஸ் பார்ம்ஸ் திகழ்கின்றது. தனது முழு விநியோகத் தொடரிலும் காபன் கரிசனை மிகுந்த வழிமுறை பின்பற்றப்படுவதை உறுதி செய்கின்றது. வலுச் சேமிப்பு நடவடிக்கைகள், பொறுப்பு வாய்ந்த கழிவு அகற்றல் கட்டமைப்புகள், சூரிய வலுப் பாவனைக்கு மாறுதல், தன்னியக்கமயமாக்கலுக்கு மாறுவதனூடாக கடதாசி பாவனையைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளினூடாக இந்த GHG வெளியேற்றம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

நியு அந்தனீஸ் பார்ம்ஸ் தவிசாளரும் இணை ஸ்தபகருமான எமில் ஸ்டான்லி கருத்துத் தெரிவிக்கையில், "நாம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் சூழலுக்கு நட்பான தொழிற்துறையின் சிறந்த செயன்முறைகளை பின்பற்றுவதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். GHG சான்றைப் பெற்றுக் கொண்டுள்ளமையானது



எமது நிறுவனத்துக்கு முக்கியத்துவம்வாய்ந்ததாக மாத்திரம் அமைந்திராமல், நாட்டின் கோழிப் பண்ணைத் துறைக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இதனூடாக, காபன் வெளியீட்டை குறைப்பது தொடர்பில் எமது அர்ப்பணிப்பையும், ஆற்றலை இது பிரதிபலிக்கப்படுவதுடன், பல தலைமுறைகளுக்கு எமது சூழல் கட்டமைப்பை பேணுவதற்கும் உதவியாக அமைந்துள்ளது." என்றார்.

சூழலுக்கு நட்பான முறையில் கோழி இறைச்சியை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு கிடைத்த சான்றாக இந்த சான்றிதழ் அமைந்துள்ளது. 'HarithaHari' கோழி இறைச்சியினூடாக இயற்கையான பசுமை வழங்கப்படுவதுடன், சரியான சுவை மற்றும் நறுமணம் போன்றவற்றுடன், சரியான போஷாக்கும் கிடைக்கின்றது. இறைச்சியில் அவசியமான அமினோ அமிலங்க்ள அடங்கியிருப்பதுடன், 100 சதவீதம் இயற்கை வழிமுறைகளைப் பின்பற்றி, பாதுகாப்பான முறையில் உற்பத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. விலங்கு நலன்புரி பணிகள், பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் போன்றன அமெரிக்காவின் தேசிய கோழிஇறைச்சி சம்மேளனத்தின் நியமங்களை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளன.

நியு அந்தனீஸ் பார்ம்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "சமூகப் பொறுப்புணர்வு என்பதற்கு அப்பாற்பட்டதாக பசுமையான வழிமுறைகளைப் பின்பற்றுவது என்பது அமைந்திருப்பதுடன், அதை கடப்பாடாகவும், கடமையாகவும் கருதுகின்றோம். நாம் ஏற்கனவே பெற்றுள்ள பல சான்றுகளுடன், இந்த சான்றிதழும், எமது சகல வாழ்வாதாரங்களின் நலனுக்காக சரியான கோழி இறைச்சியை வழங்கும் பயணத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த படியாக அமைந்துள்ளது." என்றார்.

நியு அந்தனீஸ் பார்ம்ஸ் என்பது GMP, HACCP மற்றும் ISO 22000 சான்றுகளைப் பெற்ற நிறுவனமாக அமைந்திருப்பதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச ஹலால் சான்றுகளையும் பெற்றுள்ளது. பாரம்பரிய பிளாஸ்ரிக் அல்லது பொலிதீன் மூலப் பொருட்களை பயன்படுத்தி பொதியிடுவதிலிருந்து மாறி, கொம்போஸ்டாக மாற்றக்கூடிய பொதியிடலை பின்பற்றும் இலங்கையின் முதலாவதும், ஒரே கோழி இறைச்சி உற்பத்தியாளராக திகழ்கின்றது.

1986 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நியு அந்தனீஸ் பார்ம்ஸ், கடந்த காலங்களில் நம்பிக்கை மற்றும் தரம் போன்றவற்றுக்காக பாரிய வளர்ச்சியையும் வெற்றிகரமான செயற்பாடுகளையும் பதிவு செய்துள்ளது. இதனை அதன் பங்காளர்களுடன் நீண்ட காலமாக பேணி வரும் உறுதியான உறவுகளினூடாக அவதானிக்க முடிகின்றது. உற்பத்திக் கொள்ளளவை அதிகரிக்கும் விரிவாக்க நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொள்வதுடன், தூரநோக்குடைய ஏற்றுமதி அடிப்படையிலான தந்திரோபாயத்தையும் கொண்டுள்ளது.

செலான் வங்கியின் 'Tikiri Save the Moment'

# புகைப்பட போட்டி

செலான் டிக்கிரி, 'Tikiri Save the Moment' புகைப்பட போட்டியை முன்னெடுத்துள்ளது. சிறுவர்கள் மத்தியில் தமது வாழ்க்கையின் சிறந்த தருணங்களை புகைப்படமெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. கடந்த இரு வருட காலமாக, கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக மக்களின் நடமாட்டம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ள நிலையில், பல சிறுவர்களுக்கு புகைப்படக்கலை என்பது மிகவும் நேசிக்கப்படும் அம்சமாக மாறியிருந்தது.

> கல்வியறிவுடைய குடிமக்களாக தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளை செலான் டிக்கிரி தொடர்ந்து முன்னெடுக்கும்

அவர்களை கவரும் தருணங்களை புகைப்படமெடுப்பதனூடாக, அவர்களினுள் காணப்படும் ஆக்கத்திறன் மேம்படுத்தப்பட்டு, அவர்களுக்கு அதிகளவு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். இதனை புரிந்து கொண்டு, செலான் டிக்கிரி, டிக்கிரி கணக்குதாரர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, முதலாவது டிஜிட்டல் புகைப்பட போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையில் அதிகளவு நேசிக்கப்படும் சிறுவர் சேமிப்புக் கணக்காக செலான் டிக்கிரி கணக்கு அமைந்துள்ளது. சர்வதேச போக்குகளை பின்பற்றுவது மற்றும் சிறுவர்களுக்கு களத்தை ஏற்படுத்திக் கொடுப்பது போன்றன செலான் டிக்கிரியின் இலக்குகளாக அமைந்துள்ளன. சிறுவர்களுக்கு கல்வியறிவூட்டுவது, ஈடுபாட்டை பேணுவது மற்றும் ஊக்குவிப்பது போன்றவற்றில் பல புத்தாக்கமான வழிமுறைகளை இனங்காணும்

நடவடிக்கைகளை வங்கி தொடர்ச்சியாக இனங்கண்டவண்ணமுள்ளது. இந்தத் திட்டத்தினூடாக, தமது இளம் வாடிக்கையாளர்களை ஊக்குவித்து, தமது இனிய தருணங்களை படமெடுத்து, அவற்றை நினைவாக வைத்திருந்து, தமது குடும்பத்தார் மற்றும் அன்புக்குரியவர்களுடன் மகிழ்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்தப் போட்டியின் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பணப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் போன்றன வழங்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட புகைப்படங்கள் 2022 ஆம் ஆண்டின் செலான் வங்கியின் நாட்காட்டியில் பிரசுரிக்கப்பட்டன.

இந்தத் திட்டம் தொடர்பாக செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் பிரிவின் உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "சிறுவர் சேமிப்புக் கணக்கை விட எப்போதும் செலான் டிக்கிரி அப்பாற்பட்டதாக அமைந்துள்ளது. முடக்கல்நிலை அமுலிலிருந்த காலப்பகுதியிலும் எமது சிறுவர் கணக்குதாரர்களுடன் பல்வேறு நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டோம். அதிகளவு டிஜிட்டல் பிரசன்னத்துடன் வேகமாக வளர்ந்து வரும் சிறுவர் சேமிப்புக் கணக்காக செலான் டிக்கிரி அமைந்துள்ளது. எமது ரசிகர்களின் ஈடுபாடு, ஆர்வம் மற்றும் கருத்துப் பகிர்வின் பிரகாரம், இந்த ஆண்டில் பல டிஜிட்டல் செயற்திட்டங்களை அறிமுகம் செய்து, எமது சமூக வலைத்தள பிரசன்னத்தை மேம்படுத்தியிருந்தோம். சிறுவர்கள் மத்தியில் புகைப்படக் கலை என்பது வளர்ந்து வருவதுடன், இந்தப் பழக்கத்தை ஊக்குவிக்க செலான் வங்கியைச் சேர்ந்த நாம் தீர்மானித்தோம். அதனூடாக சிறுவர்களுக்கு தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்கு களத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தோம்." என்றார்.

இந்தப் போட்டி இரு பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது. பங்குபற்றுநர்களிலிருந்து வெற்றியாளர்கள் தெரிவு இடம்பெற்றதுடன், 'Most Popular Photographs' இல் ஐந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்தப் பிரிவில் செலான் வங்கியின் உத்தியோகபூர்வ சமூக ஊடக கட்டமைப்பில் அதிகளவு likes, shares மற்றும் responses அடிப்படையில் சந்தனி அலஹகோன், ஹமெத் கெம்சிலு, ஜே.ஹிருஷன், மினுதி விதுன்யா மற்றும் செனுலி நெதும்சா ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 'Best Photographs' பிரிவில் உள்ளக நடுவர் குழுவினால் ஆதில் வீரக்கொடி, மொஹமட் பயாஸ் ஆதிஃவ், எம். டபிள்யு. பமதி சசென்யா, சமீஹா சஃவாஸ் மற்றும் ரஷித் ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கையின் எதிர்கால தலைமுறையினரை பொறுப்பு வாய்ந்த, கல்வியறிவுடைய குடிமக்களாக தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளை செலான் டிக்கிரி தொடர்ந்து முன்னெடுக்கும் என்பதுடன், சேமிப்புப் பழக்கத்தையும் அவர்கள் மத்தியில் ஊக்குவிக்கும்.

LK Newspapers Viber Community

# பொம்மைகளில் தலை இருக்கக் கூடாது

## தலிபான்கள் அதிரடி உத்தரவு

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றியுள்ள தலிபான்கள்"திருமணத்தில் இசை நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது, சலூன் கடைகளில் தாடியை எடுக்கக் கூடாது, பெண்கள் தொலைக்காட்சித் தொடர்கள் மற்றும் விளம்பரங்களில் நடிக்கக் கூடாது உள்ளிட்ட பல்வேறு கடுமையான சட்டங்களை அமுல்படுத்தி வருகின்றனர்.

மேலும் சட்டங்களை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளையும் விதித்து வருகின்றனர்.

இந்நிலையில் ஆடையகங்களில் உள்ள அலங்கார பொம்மைகளில்



தலை இருக்கக் கூடாது என்ற புதிய சட்டத்தை அமுல்படுத்தியுள்ளனர்.

இது குறித்து அந்நாட்டின் நல்லொழுக்கத்தை மேம்படுத்துதல் அமைச்சகத்தின் தலைவர் அஜிஸ் ரகுமான் கூறும்போது, 'மனித உருவங்களை காட்சிப்படுத்துவது ஷரியத் சட்டத்துக்கு எதிரானது என்பதால் கடைகளில் உள்ள பொம்மைகளின் தலைகளை துண்டிக்குமாறு நாங்கள் உத்தரவிட்டுள்ளோம்.

அவர்கள் தலையை மட்டும் மூடி வைத்தாலோ அல்லது முழு பொம்மையை மறைத்து வைத்தாலோ அவர்களின் கடை மற்றும் வீடுகளில் கடவுள் ஆசீர்வதிக்க மாட்டார்' என்று தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஆடையகங்களிலுள்ள பொம்மைகளின் தலைகளை சிலர் துண்டிப்பது போன்ற வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சீனா

### 3 குழந்தைகள் பெற்றுக் கொண்டால்
## அதிரடி சலுகைகள்

லகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக சீனா விளங்குகிறது. எனினும் சமீபகாலமாக சீனாவில் குழந்தைகளின் பிறப்பு வீதம் மிகவும் குறைவாக உள்ளது.

அதன்படி கடந்த 2020 ஆம் ஆண்டு சீனாவிலுள்ள ஒட்டுமொத்த பிறப்பு வீதம் 1,000 பேருக்கு 8.52 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2020 ஆம் ஆண்டு சீனாவிலுள்ள 10 மாநிலங்களிலும் குழந்தைகளின் பிறப்பு 1 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. எனவே இதனைச் சரிசெய்ய சீன அரசாங்கம் அதிரடியான உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

அதாவது சீன தம்பதிகள் 3 குழந்தைகள் வரை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

மேலும் அதற்காக மானியங்கள், பேறுகால விடுமுறைகள் போன்ற பல சலுகைகளையும் அந்நாடு அரசு சீன தம்பதியினருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## உண்பதற்கும், குடிப்பதற்கும் 'முதுகலைப் பட்டம்'

பிரான்சில் உள்ள ஒரு புகழ்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் உண்பதற்கும், குடிப்பதற்கும், நன்கு வாழ்வதற்குமான ஒரு புதிய முதுகலை பட்டப்படிப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரான்சின் மிகவும் புகழ்பெற்ற அரசியல், அறிவியல் பல்கலைக்கழகமான சயின்சஸ் போ லில்லில்லேயே (Sciences Po Lille) இப் பட்டப்படிப்பானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம் முதுகலை பட்டப்படிப்பானது BMW என, அதாவது boire manger vivre என அழைக்கப்படுவதாகவும் ,இதில் உணவு, பானங்கள் மற்றும் 'வாழ்க்கை' ஆகியவற்றை குறிக்கும் வகையில் பாடங்கள் அமைந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த படிப்பு gastro-diplomacy யை சார்ந்து காணப்படுவதாகவும், இதில் உணவு குறித்த தொழில்நுட்பம், சமயலறையில் பாலின பாகுபாடு போன்றவை குறித்து கற்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து விரிவுரையாளர் Ben[illegible]t Lengaigne கூறுகையில் இந்த புதிய படிப்பை மாணவர்களுக்கு எளிதில் ஒரு ஆர்வத்தை தூண்டும் வகையில் அமையும். , இந்த பட்டப்படிப்பு அனைவரையும் ஒன்றிணைக்கும் வகையில் அமைகிறது"என்றார்.

பிரான்ஸ்

### கொரோனாத் தொற்றியிருந்தாலும்
## பணிக்குச் செல்ல வேண்டும்

பிரான்ஸ் நாட்டில் கொரோனா பாதிப்பு ஏற்பட்ட மருத்துவ மற்றும் சுகாதார ஊழியர்கள், தொடர்ந்து பணிக்கு செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்நாட்ட அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் " நாட்டில், ஒவ்வொரு நாளும் கொரோனோ பாதிப்பு அதிகரித்து கொண்டிருக்கிறது. எனவே, மருத்துவமனைகளில் அதிக நோயாளிகள் அனுமதிக்கப்படும் நிலை ஏற்படலாம்.

எனவே, கொரோனா பாதிப்பு ஏற்பட்ட சுகாதார ஊழியர்கள் சிறிய அறிகுறிகள் ஏற்பட்டால் அவர்கள் வேலைக்கு செல்லலாம். அவர்கள் தாங்களாகவே தனிமைப்படுத்திக்



கொண்டிருக்க தேவையில்லை. மருத்துவமனையில் ஊழியர்கள் தட்டுப்பாட்டை சரி செய்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கையால் பிறருக்கு தொற்று பரவக்கூடிய அபாயம் இருக்கிறது. எனினும் அத்தியாவசிய மருந்து தேவைகள் தொடர்ந்து நடைபெற இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது"எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ்

## மக்களை விமர்சித்த ஜனாதிபதி

பிரான்ஸில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

இந்நிலையில் பிரான்ஸின் ஜனாதிபதியான இமானுவேல் மெக்ரோன் அண்மையில் தடுப்பூசி செலுத்தாதவர்கள் குறித்து தெரிவித்த கருத்துக்கள் அந்நாட்டு மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது "கொரோனாத் தடுப்பூசியைச்



செலுத்தி கொள்ளாத நபர்களை நாங்கள் சிறையில் அடைக்க போவதில்லை. இருப்பினும் அவர்களை இழிவுபடுத்த போகிறேன். அதோடு மட்டுமின்றி வருகின்ற 15 ஆம் திகதியிலிருந்து தடுப்பூசி செலுத்தி கொள்ளாதவர்கள் உணவகங்கள் உட்பட எந்தவித பொது இடங்களுக்கும் செல்ல முடியாது " என்றார்.



கஜகஸ்தான்

## கஜகஸ்தானில் அவசர நிலைப் பிரகடனம்

கஜகஸ்தானில் எரிபொருள் விலை உயர்வை கண்டித்து இடம்பெற்று வரும் தொடர் போராட்டங்கள் காரணமாக அந்நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கஜகஸ்தானின் பிரதமரான அஸ்கர் மாமின் அந்நாட்டில் எரிபொருட்களின் விலையை அண்மையில் உயர்த்தினார்.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் எரிபொருட்களின் விலை உயர்வை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப் போராட்டங்களின் காரணமாக தலைநகர் கல்தான் உட்பட பல முக்கிய பகுதிகளில் இணையதளம் மற்றும் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் கஜகஸ்தான் நாட்டின் பிரதமரான அஸ்கர் தான் பதவி விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

இருப்பினும் போராட்டத்தை கைவிடாத ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய தாக்குதலில் 2 அதிகாரிகள் உயிரிழந்ததாகவும், இதனால் அவர்களைக் கட்டுப்படுத்த அந்நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடர்:
# டொட்டென்ஹாமை வென்ற செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரில், செல்சியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருக்குமிடையிலான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது.

விலகல் முறையிலான இத்தொடரில் செல்சி சார்பாக கை ஹவேர்ட்ஸ் ஒரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஒவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

### இங்கிலாந்துக்கெதிரான நான்காவது டெஸ்டில்
## முன்னிலையில் அவுஸ்திரேலியா



இங்கிலாந்துக்கெதிரான நான்காவது டெஸ்டில் அவுஸ்திரேலியா முன்னிலை பெற்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இந்த ஆஷஸ் தொடரில், சிட்னியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த குறித்த போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, ஸ்டீவ் ஸ்மித், உஸ்மான் கவாஜா மூலம் இனிங்ஸைக் கட்டியெழுப்பியது.

இந்நிலையில், 67 ஓட்டங்களுடன் ப்ரோட்டிடம் ஸ்மித் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த கமரோன் கிறீனும் உடனேயே ப்ரோட்டிடம் வீழ்ந்திருந்தார். பின்னர் வந்த அலெக்ஸ் காரியும் சிறிது நேரத்திலேயே அணித்தலைவர் ஜோ றூட்டிடம் வீழ்ந்திருந்தார்.

அந்தவகையில், நிலைத்து நின்ற கவாஜா, முதலில் அணித்தலைவர் பற் கமின்ஸின் துணையுடனும், அவர் 24 ஓட்டங்களுடன் ப்ரோட்டிடம் வீழ்ந்த நிலையில், பின்னர் மிற்செல் ஸ்டார்க்கின் துணையுடனும் ஓட்டங்களைக் குவித்தார்.

இறுதியாக 137 ஓட்டங்களுடன் ப்ரோட்டிடம் கவாஜா வீழ்ந்த நிலையில், தமது முதலாவது இனிங்ஸை 8 விக்கெட்டுகளை இழந்து 416 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவுஸ்திரேலியா இடைநிறுத்தியது. ஸ்டார்க் 34, நேதன் லையன் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 13 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 416/8 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா 137, ஸ்டீவ் ஸ்மித் 67, மார்க்கஸ் ஹரிஸ் 38, மிற்செல் ஸ்டார்க் ஆ.இ 34, டேவிட் வோணர் 30, மர்னுஸ் லபுஷைன் 28, பற் கமின்ஸ் 24, நேதன் லையன் ஆ.இ 16 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்டுவர்ட் ப்ரோட் 5/101, ஜோ றூட் 1/36, ஜேம்ஸ் அன்டர்சன் 1/54, மார்க் வூட் 1/76)

இங்கிலாந்து: 13/0



### பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்
## ஆறாமிடத்துக்கு முன்னேறிய றபாடா

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஆறாமிடத்துக்கு தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சாளர் ககிஸோ றபாடா முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய றபாடா, ஏழாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தை அடைந்துள்ளார்.

இதேவேளை, இப்போட்டியில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா, 12ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகீன் ஷா அஃப்ரிடி, 4. டிம் செளதி, 5. ஜேம்ஸ் அன்டர்சன், 6. ககிஸோ றபாடா, 7. ஜொஷ் ஹேசில்வூட், 8. நீல் வக்னர், 9. ஜஸ்பிரிட் பும்ரா, 10. மிற்செல் ஸ்டார்க்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. ஜோ றூட், 3. கேன் வில்லியம்ஸன், 4. ஸ்டீவ் ஸ்மித், 5. றோஹித் ஷர்மா, 6. டேவிட் வோணர், 7. திமுத் கருணாரத்ன, 8. பாபர் அஸாம், 9. விராட் கோலி, 10. ட்ரெவிஸ் ஹெட்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜேஸன் ஹோல்டர், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. இரவீந்திர ஜடேஜா, 4. ஷகிப் அல் ஹஸன், 5. மிற்செல் ஸ்டார்க்.

## ஓய்வு முடிவை அறிவித்த ராஜபக்ஷ

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் தனது முடிவை இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டவீரர் பானுக ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

குடும்பக் கடமைகளைக் காரணங்காட்டி இலங்கை கிரிக்கெட் சபையிலிருந்து இராஜினாமா செய்வதாக கடிதமொன்றை 30 வயதான ராஜபக்ஷ அளித்துள்ளார்.

ஐந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 18 இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளிலும் ராஜபக்ஷ விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

உடற்தகுதி குறித்து இலங்கை கிரிக்கெட் சபையுடன் ராஜபக்ஷ பிரச்சினைகளைக் கொண்டிருந்த நிலையில், புதிய உடற்தகுதி



மட்டங்களை இவ்வாண்டுக்கு இலங்கை கிரிக்கெட் சபை அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Viber Community